உலக வரலாற்றில் முதன்முறையாக e-mail இல் வெளிவரும் இதழ்


www.aanmeegamalar.com

e-magazine

வெளியிடும்


# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்


மலர்-8 இதழ்-196

செப்டம்பர் 1-16 2026


## சிறுவனுக்கு வைத்தியம் பார்த்த பெரியவா




## அகத்தியர் பிரதிஷ்டை செய்த 432-வது லிங்க திருமேனி

# ஐந்து தலை பிரம்மன்

படைக்கும் கடவுளான பிரம்மாவிற்கு ஆரம்பத்தில் ஐந்து தலைகள் இருந்தன. இந்த பத்து திருக்கரங்களில் வேதப் புத்தகம், ஜெபமாலை, கமண்டலம் மற்றும் தாமரை மலர் ஆகியவை ஏந்தப்பட்டுள்ளன. சிவபெருமானுக்கு ஐந்து தலைகள் இருப்பது போல் தனக்கும் ஐந்து தலைகள் உள்ளதால் தான் இறைவனுக்கு சரிசமமானவன் என்ற கர்வம் வந்த காரணத்தால் சிவபெருமானால் அந்த ஐந்தாவது தலை கொய்யப்பட்டு நான்கு தலைகளுடன் நான்முகன் என்ற பெயர் பெற்றதாக புராணங்கள் கூறுகின்றன. aanmeegamalar.com

சிவபெருமானால் பிரம்மாவின் ஐந்தாவது தலை கொய்யப்படுவதற்கு முன்பு பிரம்மன் ஐந்து தலைகளுடன் (பஞ்சமுகன்) படைப்பின் கடவுளாகக் காட்சியளித்த நிலையைக் குறிக்கும் சிற்பம். இந்த சிற்பம் சென்னை கோயம்பேட்டில் உள்ள அருள்மிகு குறுங்காலீஸ்வரர் திருக்கோயில் அதன் நுழைவாயிலில் அமைந்துள்ள 16 கால் மண்டபத்தில் உள்ள ஒரு குறிப்பிட்ட தூணில் பிரம்மனின் அழகிய சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. இந்த தூண் சிற்பங்கள் கிபி 14 முதல் 15 ஆம் நூற்றாண்டு விஜயநகர பேரரசு அல்லது பிற்காலச் சோழர் காலத்தைச் சேர்ந்தவையாக இருக்கலாம் என்று வரலாற்று ஆசிரியர்களால் கருதப்படுகின்றன.





# வீணை இசைக்கும் தட்சிணாமூர்த்தி

ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டம் நாகலாபுரத்தில் புகழ் பெற்ற ஸ்ரீ வேத நாராயண சுவாமி கோயிலின் கோஷ்டத்தில் வீணாதார தட்சிணாமூர்த்தி அருள் பாலிக்கிறார்.

தட்சிணாமூர்த்தி வழக்கமாக அனைத்து சிவாலயங்களில் இருப்பார். சில பெருமாள் தலங்களில் புராண கதைகளின் படி இவரைக் காண முடியும். தட்சிணாமூர்த்தி தன் கரங்களில் வீணையை ஏந்தி இசையின் மூலம் பிரபஞ்ச ஞானத்தைப் போதிக்கும் காட்சியில் அருள் பாலிக்கிறார். aanmeegamalar.com

பேரரசர் கிருஷ்ண தேவராயரின் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட இக்கோயில் கட்டடக் கலைக்கும் ஆன்மீக ஒற்றுமைக்கும் சான்றாக விளங்குகின்றது.

இந்த பெருமாள் கோயிலில் தட்சிணாமூர்த்தி அருள்பாலிப்பதுபோல் கல்லிடைக் குறிச்சி மன்னார் கோயிலில் உள்ள வேதநாராயணர் கோவில் விமானத்திலும், கடையநல்லூர் நீலமணிநாதசுவமி கோயிலிலும் கம்பம் கம்பராயப்பெருமாள் கோயிலிலும் மதுரை சோழவந்தானிலுள்ள பெருமாள் கோவிலிலும் அருள் பாலிக்கிறார்.

e-magazine
aanmeegamalar.com




e-magazine
aanmeegamalar.com

# சொர்க்கம் மோட்சம்


## இரண்டிற்கும் உள்ள வித்தியாசம்

பல நேரங்களில் நாம் மகிழ்ச்சியாக இருக்கும் போது ‘நான் சொர்க்கத்தில் இருப்பது போல உணர்கிறேன்’ என்று கூறுகிறோம். இதன் மூலம் அதுவே நமது மேலான விருப்பம் என்பது போல ஒரு தோற்றம் ஏற்படுகிறது. பல நேரங்களில் ஒருவர் உயிர் துறக்கும் போது ‘அவர் சொர்க்கலோகப் பதவி அடைந்தார்’ என்றும் ‘வைகுண்ட பதவி/கைலாச பதவி அடைந்தார்‘ என்றும் மாறி மாறி கூறுறோம். அதனால் இவ்விரண்டும் ஒன்றோ என்ற சந்தேகம் ஏற்படுவது இயற்கையே. நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால்..... aanmeegamalar.com

சொர்க்கம், மோட்சம் ஆகிய இரண்டும் முற்றிலும் வேறுவேறானவை.

நம் சம்பிரதாயத்தில் ஒரு பிறவியில் செய்யும் பாவபுண்ணியங்களின் அடிப்படையில் ஒருவரின் அடுத்த பிறவி நிர்ணயிக்கப்படுகிறது. ஒருவர் அரசனாக இருப்பதும் ஏழையாக, கோழையாக, நோயாளியாக இருப்பதும் துன்பங்களை அனுபவிப்பதும் அவரவரின் கர்ம வினைகளாலேயே ஆகும். நற்காரி யங்கள் செய்பவர் மனிதன் முதலான உயர்பிறவியில் பிறந்து நல்வாழ்க்கையை அனுபவிக்கிறார். தீய காரியங்களில் ஈடுபடுபவர் விலங்குகள் அல்லது கீழான நிலையில் பிறந்து அல்லல் படுகிறார். aanmeegamalar.com

மனிதப் பிறவி ஒரு உயர்ந்தப் பிறவியாகக் கருதப் படுகிறது அதற்கு காரணம், தன் செயல்களால் ஏற்படும் விளைவுகளை அறியும் மனநிலையில் மனிதன் இருக்கிறான். அத்தகைய மனிதன் மேலான புண்ணிய காரியங்களை செய்யும் போது அவன் புண்ணிய கணக்கு உயர்ந்து அனைத்து மகிழ்ச்சி களையும் தரக் கூடிய சொர்க்க லோகத்தை மறுபிறவியில் அடைகிறான். ஆனால் இது நிரந்தரமானது அல்ல. அந்தப் பலன்கள் தீரும் போது அவன் மீண்டும் இவ்வுலகில் பிறக்கி றான்.



அதே போல பாவம் செய்து நரகத்தில் உழல்கின்றவனும் அந்தப் பலன் தீர்ந்து மறுபடி இங் கேயே பிறக்கிறான். பாவபுண்ணியங்கள் சேர்வதன் மூலம் முடிவில்லாத பிறப்புஇறப்பு என்னும் சூழலில் சிக்கித் தவிக்கிறான்.

இந்த முடிவில்லாத வட்டத்தில் இருந்து விடுபடுவதே மோட்சமாகும். ஒருவருக்கு மோட்சம் கிட்டும் போது இந்த உலக வாழ்க்கை என்னும் சங்கிலி அறுபடுகிறது. அவர் இறைவனின் அடி யில் இடைவிடாது தொழும் பெரும் பேற்றைப் பெறுகிறார். aanmeegamalar.com

நாம் அனைவரும் இந்த நிலையை அடையவே ஆசைப் படவேண்டும். இந்நிலையை அடைய முக்கியமான விதி – பாவ புண்ணியங்கள் இரண்டுமே பூஜ்யமாக இருக்க வேண்டும்.

பாவம் செய்யாமல் இருக்க முயலலாம், ஆனால் புண்ணியம் செய்யாமல் இருப்பது சரியா? என்ற கேள்வி எழுகிறது. நம் பெரியவர்கள் இதற்கு கூறும் விளக்கம், ஒரு நற்செயலை அதன் பயனை எதிர்பார்க்காமல் செய்யும் போது அந்த செயலுக்கான புண்ணியம் நம்மை அடைவ தில்லை.

அத்தகைய எண்ணத்தோடு சுக துக்கங் களை ஒன்றாக பாவித்து இறைவனை தியானித்தோமானால் மோட்சத்தை அடையலாம்.

இதை விளக்கும் பகவத் கீதை ஸ்லோகங்களின் பொருள் கீழே: aanmeegamalar.com

## அத்யாயம் 9 – ஸ்லோகம் 20

எவரொருவர் வேதத்தில் கூறியபடி யாகங்கள் முதலியவற்றால் என்னை வணங்கி தங்கள் பாபங்களை ஒழிக்கிறார்களோ அவர்கள் தங்கள் செயல்களின் பலனால் இந்திர லோகத்தை அடைந்து அனைத்து சுகங்களையும் அனுபவிப்பார்கள்.



## அத்யாயம் 9 – ஸ்லோகம் 21:

அவ்வாறு அந்த பலனை அனுபவிப்பவர்கள், தங்கள் கணக்கைத் தீர்த்த பின் மீண்டும் இப்பூமியில் பிறந்து இங்கு தங்கள் வாழ்வைக் கழிக்கிறார்கள். இந்த பிறப்பு இறப்பு தொடர்ச்சியாக நடைபெறுகிறது.

## அத்யாயம் 9 – ஸ்லோகம் 28:

எப்பொழுது நீ உன் காரியங்களின் பலன்களை என்னிடம் முழுமையாக அர்ப்பணிக்கிறாயோ அப்போது பாபபுண்ணியங்களின் இருந்து நீ விடுபடுகிறாய். அவ்வாறு விடுபட்டு நீ என்னிடம் நிரந்தரமாக வந்தடைகிறாய்!

நாமும் ஆழ்வார் பாடலில் கூறியதான ‘இந்திர லோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன், அரங்கமா நகருளானே!’ என்பதுவாய் கீழான பலன்களில் ஆசை வைக்காமல் பெரு வீடு பெரும் முயற்சிகளில் ஈடுபடுவோமாக!

# சபரிமலை பயணத்தில் தரிசிக்க வேண்டிய முக்கிய இடங்கள்





பந்தளம் அரண்மனை

சிவ, விஷ்ணுவுக்கு மகனாக அவதரித்த ஐயப்பன், ஜோதியாக காட்சி தந்த சிவனுக்குரிய கார்த்திகை மாதத்தை தனக்கான மாதமாக எடுத்துக் கொண்டு, பெருமாளுக்குரிய மார்கழி மாதம் முழுவதும் தொடர்ந்து விரதமிருந்து, தை மாத துவக்கத்தில் ஜோதியாக பக்தர்களுக்கு காட்சி தந்து சிவ விஷ்ணு ஒற்றுமையை உலகுக்கு உணர்த்தியவர் ஐயப்பன்.

ஐயப்பனை வருடத்தின் அனைத்து தினங்களிலும் தரிசிக்க முடியாது, சில வருடங்களுக்கு முன்புவரை வருடத்திற்கு மூன்று மாதங்கள் மட்டுமே தரிசிக்க முடியும் என்ற நிலை இருந்தது. தற்போது மாதத்திற்கு 5 நாட்கள் கூடுதலாக தரிசிக்க முடியும் என்ற நிலையில், ஐயப்பனுக்கு பக்தர்கள் கூட்டம் பெருகிவருகிறது. aanmeegamalar.com

இவர் அமர்ந்து தியானம் செய்யும் சபரி மலைக்கு சென்று மீண்டும் திரும்புவது நிச்சயமா என்று தெரியாத காலங்களில் ஐயப்பனுக்குரிய விரத நடைமுறை மிக கடுமையாக இருந்தது.

குறிப்பாக காட்டில் ஒரு மனிதன் எவ்வாறு வாழ வேண்டும் என்ற பயிற்சியை ஒற்றி அமைந்ததுதான் ஐயப்பனுக்குரிய விரதம்.

வசதி வாய்ப்பு இருந்தாலும், நாவிற்கான சுவையை மறந்து, உடலுக்கான சுகத்தை மறந்து, கட்டுப் பாட்டுடன் காட்டில் வாழ தன்னை தயார்படுத்திக் கொள்வதாக அமைந்ததுதான் 48 நாட்கள் விரத நடைமுறை. aanmeegamalar.com

அவ்வளவு கடுமையான விரதம் இருந்தால்தான் ஐயப்பனை தரிசிக்க முடியும் என்ற நிலை தற்போது கிடையாது, சபரிமலை செல்வது ஏதோ சுற்றுலா செல்வது போல வசதி வாய்ப்புகள் பெருகிவிட்டதால், மேற்கண்ட கடுமையான விரதத்தை தற்போது யாரும் பின்பற்றுவது கிடையாது.

அதே சமயத்தில் சபரிமலை செல்பவர்கள் தற்போது ஆன்மிக சுற்றுலா செல்வதைப் போன்று பல்வேறு கோவில்களை தரிசித்தவாறு சபரிமலை சென்று ஐயப்பனை தரிசிக்கின்றனர்.

அந்த வகையில் மேலும் சிறப்புக்குரிய ஐயப்பன் வாழ்வுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு இடங்களையும் தரிசித்து ஐயப்பனை தரிசனம் செய்தால், ஐயப்பன் வாழ்ந்த வரலாற்றுடன் சபரிமலை செல்லும் அனுபவம் கிடைக்கும் அந்த வகையில் ஐயப்பனுக்குரிய ஒரு சில முக்கியமான இடங்களை பார்ப்போம்.

## பந்தளம் அரண்மனை

pandalam palace

சபரிமலை ஐயப்ப பக்தர்களுக்கு மிகவும் புனிதமான இடங்களில் ஒன்று பந்தளம் அரண்மனை ஆகும். பகவான் ஐயப்பன், மணிகண்டன் என்ற மனித அவதாரத்தில் வளர்ந்த இடம் இதுவே என்று



e-magazine
aanmeegamalar.com

நம்பப்படுகிறது.

பந்தளம் அரண்மனையில் மணிகண்டன் சுமார் 12 ஆண்டுகள் வளர்ந்ததாக ஐதீகம் கூறுகிறது.

மணிகண்டன் இளவரசராக அறிவிக்கப்படவிருந்த போது, அரசியின் பொறாமையால் ஒரு சூழ்ச்சி நடந்தது. அரசி நோயுற்றதாக நடித்து, “புலிப்பால் மட்டுமே எனக்கு மருந்து” என்றார்.

மணிகண்டன் காட்டிற்குச் சென்று மகிஷி என்ற அரக்கியை அழித்தார். பின்னர் ஒரு பெண் புலியின் மீது ஏறி, பல புலிகளுடன் பந்தளம் அரண்மனைக்கு திரும்பினார். இதைக் கண்ட அனைவரும் அவர் சாதாரண மனிதர் அல்ல என்பதை உணர்ந்தனர்.

சபரிமலைக்கு செல்லும் பல பக்தர்கள், முதலில் பந்தளம் அரண்மனைக்கு சென்று ஐயப்பன் வளர்ந்த புனித இடங்களை தரிசிக்கலாம்.

## மணிகண்டன் ஆல்தாரா
(Manikandan Aalthara)

இது பாலகன் மணிகண்டன் விளையாடியதாகவும், அரச குடும்பத்தினருடன் வாழ்ந்த காலத்தின் நினைவிடமாகவும் கருதப்படுகிறது. பக்தர்கள் இங்கு பிரார்த்தனை செய்து ஐயப்பனின் பால்ய பருவத்தை நினைவுகூர்கிறார்கள்.

## தேவரப்புரா
(Thevarapura)

மணிகண்டன் தினமும் தியானம் மற்றும் பூஜை செய்ததாக நம்பப்படும் பிரார்த்தனை அறைகள். இதில் நாலுகெட்டு மற்றும் வடக்கே கொட்டாரம் ஆகிய பகுதிகள் முக்கியமானவை.

## ஸ்ராம்பிக்கல் அரண்மனை
(Srambickal Palace)

சபரிமலை ஐயப்பனுக்கு அணிவிக்கப்படும் திருவாபரணம் பாதுகாக்கப்படும் புனித இடம். மண்டலமகரவிளக்கு காலத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் இங்கு திருவாபரண தரிசனம் செய்கிறார்கள். aanmeegamalar.com



ஸ்ராம்பிக்கல் அரண்மனை

aanmeegamalar.com

## வலியாகோயிக்கல் தர்மசாஸ்தா கோவில்
(Valiyakoikkal Temple)

இது பந்தளம் அரச குடும்பத்தின் குலதெய்வக் கோவில். மகரவிளக்கு விழாவிற்கு முன் திருவாபரண ஊர்வலம் இங்கிருந்து சபரிமலைக்கு புறப்படுகிறது. இந்தக் கோவிலின் மூலவர் தர்மசாஸ்தா (ஐயப்பன்).

## கைப்புழா கோவில்
(Kaipuzha Temple)

பந்தளம் அரண்மனை வளாகத்துடன் தொடர்புடைய மற்றொரு பழமையான கோவில். ஐயப்பனின் வரலாற்றுடன் இணைந்த புனிதத் தலமாக கருதப்படுகிறது. aanmeegamalar.com



வலியாகோயிக்கல் தர்மசாஸ்தா கோவில்


புதன்கோயிக்கல்


கைப்புழா கோவில்

## மன்னடி பகவதி கோவில்

(Mannadi Bhagavathy)

பந்தளம் அரச குடும்பத்தின் வழிபாட்டு மரபுகளுடன் இணைந்த சக்தி தலம். ஐயப்பன் காலத்தில் அரச குடும்பம் வழிபட்டதாக நம்பப்படுகிறது.

சபரிமலைக்கு செல்லும் முன் பந்தளம் அரண் மனையில் உள்ள இந்த இடங்களை தரிசிப்பது, “பாலகன் மணிகண்டனின் இல்லத்திற்கு சென்று ஆசீர்வாதம் பெறுவது” எனக் கருதப்படுகிறது. அதனால் பல குருசுவாமிகள் தங்கள் யாத்திரையை பந்தளத்திலிருந்து ஆன்மீக ரீதியாகத் தொடங்கு கிறார்கள். aanmeegamalar.com

## புதன்கோயிக்கல்

(Puthenkoikkal)

அரச குடும்பத்துடன் தொடர்புடைய பழமையான அரண்மனைப் பகுதி. ஐயப்பனின் வளர்ப்பு கால நினைவுகளை சுமக்கும் இடமாக பக்தர்கள் மதிக் கிறார்கள். aanmeegamalar.com


மன்னடி பகவதி கோவில்

உங்கள்

உள்ள கோவில்

கும்பாபிஷேகம்,

சிறப்பு விழாக்கள்,

போன்றவற்றை

# tabloid

4, 8, 12, 16 பக்கங்களில்

இதுபோன்ற

## சிறப்பு மலராக

வெளியிட தொடர்பு

கொள்ளவும்

தரமாகவும்,

சிறப்பாகவும் செய்து

தருகிறோம்...!





தொடர்புக்கு கொள்ளவும்

**அழகுராஜா**

முதன்மை செய்தியாளர்

9994323622

9444228203


தங்கள் கோவில்களின் ஆன்மிக நிகழ்வுகளை

ஆயிரக்கணக்கான பக்தர்களிடம் கொண்டு சேர்ப்போம்!



# குருவாயூரப்பனுக்கு பிடித்த உருளி மணி பிரார்த்தனை

குருவாயூர் கோயிலில் ஒரு பெரிய உருளியில் குண்டுமணியை நிரப்பி வைத்திருப்பார்கள். இரண்டு கைகளாலும் அதை அளைந்து கொண்டு நோய்கள் குணமாகவும், குழந்தை வரம் வேண்டியும் மனதார பிரார்த்தனை செய்யவேண்டும். இந்த பிரார்த்தனைக்கு சிறப்பான பலன் உண்டு.

முன்னொரு காலத்தில் ஒரு வயதான பெண் மணி இருந்தாள். அவளுக்கு ஸ்ரீகுருவாயூரப்பன் மிகவும் இஷ்டமான தெய்வம். அவளுடைய ஊர் குருவாயூருக்கு மிகத் தொலைவில் இருந்தது. அவளை அழைத்துச் செல்வார் யாருமில்லை. பணவசதி கிடையாது. aanmeegamalar.com

ஆனால் குழந்தைக் கண்ணனைக் காண வேண்டும் என்றும், அவனுக்கு ஏதாவது கொண்டு செல்ல வேண்டும் என்றும் அவளுக்குக் கொள்ளை ஆசை.

அவள் வீட்டில் மஞ்சாடி மரம் (குந்துமணி மரம்) இருந்தது. அதிலிருந்து நிறைய குண்டுமணிகள் கீழே விழும். அவற்றைச் சேகரித்து, நன்கு அலம்பி, துடைத்து ஒரு பை நிறைய சேர்த்து வைத்திருந்தாள். aanmeegamalar.com

ஒரு நாள் கண்ணனைக் காண வேண்டும் என்ற ஆவல் மிகுதியால் பயணம் புறப்பட்டாள்.

வசதி படைத்தவள் அல்லவே! அதனால் நடந்தே செல்லத் தீர்மானித்தாள். தொலை தூரம். வயது வேறு ஆகிவிட்டது. நடுநடுவே இளைப்பாறிக் கொள்வாள். aanmeegamalar.com

ஸ்ரமமாக இருப்பினும் "கண்ணனைக் காண வும் அவனுக்கு குண்டுமணிகளைக் கொடுக்கவும் வேண்டுமே" என்று தொடர்ந்து பயணம் செய்தாள்.

ஒரு மண்டலம் பயணம் செய்து குருவாயூரை அடைந்தாள். கோவிலையும் அடைந்தாள். அவள்




சென்ற நாள் அந்த மாதத்தின் முதல் நாள். அவள் கோவிலை அடைந்த சமயம், கோவிலில் மிகவும் பரபரப்பாக இருந்தது. ஏதோ விசேஷம் என்று அனைவரும் பேசிக் கொண்டிருந்தனர்.

ஒவ்வொரு மாதத்தின் முதல் நாள் அன்றும் அந்த ஊர் அரசன், அவன் பக்தியை வெளிப்படுத்த, கோயிலுக்கு ஒரு யானையை சமர்ப்பிப்பது வழக்கம். அதனால்தான் அந்த பரபரப்பு. சேவகர்கள், அரசன் வருவதால் வழியை விலக்கிக் கொண்டிருந்தனர்.

இந்த வயதான பெண்மணி, தன்னுடையபையை கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள். சேவகர்களின் அஜாக்கிரதையால் அவள் கீழே தள்ளப்பட்டாள்.

பை கீழே விழுந்து அதிலிருந்த குண்டுமணிகள் சிதறி விழுந்தன. கிழவியின் கண்களில் இருந்து கண்ணீர் ஆறாகப் பெருகியது.

ஒரு சொட்டுக் கண்ணீர் தரையில் விழுந்தது.

அதே சமயம், கோயிலுக்கு சமர்ப்பிக்கக் கொண்டு வந்த யானை மதம் பிடித்து ஓட ஆரம்பித்தது.

அனைவரும் “என்ன ஆயிற்று?” என்று பதறினர். கோவில்பொருட்களை யானை நாசம் செய்ய ஆரம்பித்தது. யானையை அடக்க முடியவில்லை.

கலங்கிய மன்னனும் மற்றவர்களும் குருவாயூரப்பனிடமே ப்ரஸ்னம் கேட்டனர்.

அப்பொழுது கர்ப்பக்ருஹத்திலிருந்து “நீங்கள் என் பக்தையை அவமானப்படுத்தி விட்டீர்கள். என் பக்தை அன்பாகக் கொண்டு வந்த குண்டுமணிகள் எனக்கு வேண்டும்’’ என்று அசரீரி கேட்டது.

கீழே சிதறிக் கிடந்த குண்டுமணிகளை,அனைவரும் பொறுக்கி எடுத்தனர். அதை அந்த வயோதிகப் பெண்மணியிடம் கொடுத்து அவளிடம் மன்னிப்பும் கேட்டனர்.

அவளை ஸகல மரியாதைகளுடன் சன்னிதிக்கு அழைத்துச் சென்றனர். அவள் ஆசையுடன் அதை குருவாயூரப்பனிடம் சமர்ப்பித்ததும், யானையின் மதம் அடங்கியது.

அவள் பக்தியின் நினைவாக இன்றும் குருவாயூர் கோயிலில் உருளியில் குண்டுமணிகள் வைக்கப்பட்டுள்ளது.

பகவான் வஸ்துக்களின் உயர்வு தாழ்வைப் பார்ப்பதில்லை.



# மஞ்சள் பூஜைக்கு பலனை தரும் இஞ்சிமேடு ஸ்ரீ பெருந்தேவி

## திருமணம், குழந்தைபாக்கியம், தந்து குறைகளை தீர்க்கும் தாயார்

திருவண்ணாமலையில் இருந்து சுமார் 64 கி.மீ. தொலைவில் உள்ள இஞ்சிமேட்டில் அமைந்துள்ளது ஸ்ரீ பெருந்தேவிதாயார் சமேத வரதராஜபெருமாள் கோவில். aanmeegamalar.com

இந்த கோவிலில் ஸ்ரீ வரதராஜபெருமாள் சன்னதி, ஸ்ரீ பெருந்தேவி தாயார் சன்னதி, கல்யாண லட்சுமி நரசிம்மர் சன்னதி, ராமருடன் லட்சுமணர், சீதாதேவி, ஆஞ்சநேயர், கருடாழ்வார் இருக்கும் சன்னதிகள் உள்ளன. இத்தலத்து ராமபிரான், பரத்வாஜ முனிவரால் பிரதிஷ்டை செய்யப்பட்டவர். ராமபிரானின் திருக்கரத்தில் ஏந்தியிருக்கும் வில்லின் மேல்புறத்தில் நரசிம்ம மூர்த்தி எழுந்தருளியிருக்கிறார். இது, வேறு எங்கும் காண முடியாத அற்புதமாகும்.

ராமரின் அருகிலேயே கருடாழ்வாரும், அனுமனும் இருக்கும் அபூர்வக் காட்சி

ராமரின் அருகிலேயே கருடாழ்வாரும், அனுமனும் காட்சியளிக்கின்றனர். இப்படி கருவறையில் பெரிய திருவடியும், சிறிய திருவடியும் ஒருசேர காட்சியளிப்பது வேறு எந்த தலத்திலும்



காண முடியாத அபூர்வக் காட்சியாகும்.

இஞ்சிமேடு திருத்தலத்தில் தனிச் சந்நிதியில் கருணையே வடிவமாக அருட்காட்சி தந்து தாயுள்ளத்துடன் தன் பக்தர்களின் குறைகளைக் களைவதில் தன்னிகரற்று விளங்குகிறார் ஸ்ரீபெருந்தேவித் தாயார். aanmeegamalar.com

கோள்சார நிலைகளினால் திருமணத்தடை மற்றும் மழலைப்பேறு இன்றி வருந்தும் அன்பர்கள் ஸ்ரீபெருந்தேவித் தாயாரை இத்திருக்கோயிலுக்கு வந்து தரிசித்து தங்கள் குறை தீர மஞ்சள் மாலை சாற்றுவதாக பிரார்த்தித்துக் கொள்கின்றனர்.

அவ்வாறு வேண்டிக் கொள்ளும் பக்தர்கள் தங்கள் இல்லத்திற்குச் சென்றதும் ஸ்ரீபெருந்தேவித் தாயாரை நினைத்து பிரார்த்தித்து ஒரு நாளுக்கு ஒரு மஞ்சளை தங்களது பூஜையறையில் எடுத்து வைத்து பூஜை செய்துவர 48 தினங்களுக்குள் தங்கள் வேண்டுதல் நிறைவேறுவதாக பக்தர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றனர்.

பிரார்த்தனை நிறைவேறியதும் இந்த மஞ்சளை மாலையாகத் தொடுத்து எடுத்து வந்து தங்களது அன்புக்காணிக்கையாக அன்னைக்குச் சமர்ப்பிக்கின்றார்கள்.

தாயாரின் திருச்சந்நிதியில் பக்தர்களால் சாற்றப்பட்ட மஞ்சள் மாலைகள் குவிந்துள்ளதால் அன்னையின் அளவற்ற சக்தியை அறிந்து



கொள்ள முடிந்தது. aanmeegamalar.com

திருத்தலம் செல்லும் வழி: வந்தவாசியிலிருந்து சேத்துப்பட்டு செல்லும் சாலையில் உள்ள சின்ன கொழப்பலூர் கூட்டுச்சாலையில் இறங்கி இஞ்சிமேடு திருத்தலம் செல்லலாம்.

வந்தவாசி ஆரணி செல்லும் சாலையில் உள்ள பெரணமல்லூர் வழியாகவும் இஞ்சிமேடு தலத்திற்கு செல்லலாம்.





# 108 சிவபெருமானின் பெயரின் பொருள்

சிவபெருமானுக்கு எண்ணிலடங்கா வடிவங்களும் பெயர்களும் உள்ளது. அவற்றில் 108பெயர்கள் அதிகமாக அறியப்பட்டு உள்ளது. அவற்றில் 108 சிவன் பெயர்களும் அதற்கான பொருளும்:

1. ஆதிகுரு முதல் குரு
2. ஆஷுதோஷ் அனைத்து விருப்பங்களையும் உடனடியாக நிறைவேற்றுபவர்
3. ஆதிநாத் முதல் கடவுள்
4. ஆதியோகி முதல் யோகி
5. அஜா பிறப்பில்லாதவன்
6. அக்ஷய குணா எல்லையில்லா குணங்களை உடையவன்
7. அனகா குறையில்லாதவன்
8. அனந்ததிருஷ்டி முடிவில்லா நோக்கு உடையவன்

aanmeegamalar.com

9. ஔகத் எப்போதும் திருப்தியாக இருப்பவன்
10. அவ்யாய பிரபு அழிக்க முடியாதவன்
11. பைரவ் பயத்தை அழிப்பவன்
12. பலநேத்ரா நெற்றிக்கண் உடையவன்
13. போலேநாத் எளிமையானவன்
14. பூதேஸ்வரா பஞ்ச பூதங்களின் மேல் ஆளுமையுடைவன்
15. பூதேவா பூமியின் கடவுள்
16. பூடபாலா உடல் சிதைந்த மனிதர்களைக் காப்பவன்

aanmeegamalar.com

17. சந்த்ரபால் நிலவின் தலைவன்
18. சந்த்ரப்ரகாஷ் பிறைநிலவை சூடியவன் (பிறைசூடி)
19. தயாளு கருணை வடிவானவன்
20. தேவாதி தேவா கடவுளர்களின் கடவுள்
21. தனதீபா செல்வங்களின் கடவுள்
22. தியான தீப் தியான ஒளி
23. தியூடிதரா பெரும்திறமைகளின் கடவுள்
24. திகம்பரா வானத்தையே தனது ஆடையாக அணிந்தவன்
25. துர்ஜநீயா அறிந்துகொள்ளப்பட வேண்டியவன்



26. துர்ஜயா வெற்றிகொள்ளப்படாதவன்
27. கங்காதரா கங்கை ஆற்றின் கடவுள்
28. கிரிஜாபதி மலைமகளின் கணவன்
29. குணக்ரஹின் குணங்களை ஏற்பவன்
30. குருதேவா மஹாகுரு
31. ஹரா பாவங்களைக் களைபவன்
32. ஜகதீஷா பிரபஞ்சத்தின் தலைவன்
33. ஜராதிஷாமனா துயரங்கள்/பாதிப்புகளிலிருந்து மீட்பவன்
34. ஜாடின் ஜடாமுடி தரித்தவன்
35. கைலாஷ் நிம்மதி/அமைதி அளிப்பவன்
36. கைலாஷபதி கைலாய மலையின் கடவுள்
37. கைலாஷ்நாத் கைலாஷ்நாத்
38. கமலாக்ஷணா தாமரைக் கண்கள் கொண்ட கடவுள்
39. காந்தா காந்தா
40. கபாலின் மண்டையோடுகளை கழுத்தில் ஆபரணமாக அணிந்திருப்பவன்
41. கோச்சடையான் ஜடாமுடி தரித்த அரசன்
42. குண்டலின் காதில் அணிகலன்கள் அணிந்தவன்


ஆன்மிகமலர்

43. லாலாடக்ஷா நெற்றிக்கண் உடையவன்
44. லிங்காத்யக்ஷா லிங்கங்களின் அரசன்
45. லோகங்காரா மூவுலகையும் படைத்தவன்
46. லோகபால் உலகைக் காப்போன்
47. மகா புத்தி எல்லை கடந்த புத்திசாலித்தனம்
48. மகா தேவா மஹா கடவுள்
49. மகா காலா காலங்களின் கடவுள்
50. மகா மாயா மஹா மாயை
51. மகா மிருத்யுஞ்ஜெயன் மரணத்தை வென்ற மாவீரன்
52. மகா நிதி மிகப்பெரும் களஞ்சியம்
53. மகா சக்தி மயா எல்லையில்லா சக்திகளைக் கொண்டவன்
54. மகா யோகி மிகப்பெரும் யோகி
55. மகேசா உச்ச கடவுள்
56. மகேஸ்வரா கடவுள்களின் கடவுள்
57. நாக பூஷணா பாம்புகளை ஆபாரணமாக அணிந்தவன்
58. நடராஜா நடனக் கலையின் அரசன்
59. நீலகண்டா நீல நிற கழுத்தை உடையவன்
60. நித்யசுந்தரா எப்பொழுதும் அழகானவன்
61. நிருத்யப்ரியா நடனங்களின் காதலன்
62. ஓம்காரா ஓம்ஜ படைத்தவன்
63. பாலன்ஹார் அனைவரையும் காப்பவன்
64. பஞ்சாட்சரன் வீரியமுடையவன்/ ஐந்தெழுத் தைக் கொண்டோன்
65. பரமேஸ்வரன் கடவுள்களிலெல்லாம் முதலானவன்
66. பரம்ஜ்யோதி மிகப் பெரும் ஒளி
67. பசுபதி வாழும் உயிர்க்கெல்லாம் அரசன்
68. பினாகின் கையில் வில்லை ஏந்தி இருப்பவன்
69. ப்ரணவா ஓம் என்னும் மூல மந்திரத்துக்கு மூலமானவன்
70. பிரியபக்தா பக்தர்களின் விருப்பமானவன்
71. பிரியதர்ஷனா அன்பான பார்வை உடைய வன்
72. புஷ்கரா போஷாக்கு அளிப்பவன்
73. புஷ்பலோச்சனா பூக்களைப் போன்ற கண்களை உடையவன்
74. ரவிலோச்சனா சூரியனைக் கண்ணாக கொண்டவன்
75. ருத்ரா கர்ஜிப்பவர்
76. சதாசிவா எல்லைகளைத் தாண்டியவர்
77. சனாதனா முடிவில்லா கடவுள்
78. சர்வாச்சார்யா உச்ச ஆசிரியர்
79. சர்வஷிவா முடிவில்லா கடவுள்
80. சர்வதாபனா எல்லோருக்கும் முன்னோடியாக இருப்பவர்
81. சர்வயோனி எப்போதும் தூய்மையானவர்
82. சர்வேஷ்வரா அனைவரின் கடவுள்
83. ஷம்போ மங்களகரமானவர்
84. ஷங்கரா எல்லா கடவுளர்க்கும் கடவுள்
85. ஷாந்தா ஸ்கந்தனுக்கு முன்னோடி
86. ஷூலின் மகிழ்ச்சியை அளிப்பவர்
87. ஷ்ரேஷ்த்தா சந்திரனின் கடவுள்
88. ஸ்ரீகந்தா எப்போதும் தூய்மையானவர்
89. ஷ்ருதிப்ரகாஷா திரிசூலத்தை வைத்திருப்பவர்
90. ஸ்கந்தகுரு வேதங்களுக்கு ஒளியேற்றுபவர்
91. சோமேஸ்வரா தூய்மையான உடலைக் கொண்டிருப்பவர்
92. சுகடா மகிழ்ச்சியை அளிப்பவர்
93. ஸ்வயம்பு தானாக உருவானவர்
94. தேஜஸ்வனி ஒளியைப் பரப்புபவர்
95. த்ரிலோச்சனா மூன்று கண்களைக் கொண்ட கடவுள்
96. த்ரிலோகபதி மூவுலகிற்கும் அதிபதி
97. த்ரிபுராரி அசுரர்கள் உருவாக்கிய 3 திரிபுரத்தை அழித்தவர்
98. த்ரிசூலின் திரிசூலத்தை கைகளில் ஏந்தியவர்

aanmeegamalar.com

99. உமாபதி உமாவின் கணவன்
100. வாச்சஸ்பதி பேச்சுக்களின் அரசன்
101. வஜ்ரஹஸ்தா இடியை தன் கரங்களில் ஏந்தியவன்
102. வரதா வரங்களை அளிப்பவர்
103. வேத கர்த்தா வேதங்களின் மூலம்
104. வீர பத்ரா பாதாள லோகத்தின் முதன்மை கடவுள்
105. விஷாலாக்ஷா பரந்த பார்வை கொண்ட கடவுள்
106. விஸ்வேஷ்வரா பிரபஞ்சத்தின் கடவுள்
107. விஸ்வநாத் பிரபஞ்சத்தின் அதிபதி
108. வ்ரிஷவாஹனா எருதை வாகனமாகக் கொண்டவர்

# வழி தெரியாமல் குழம்பித் தவிக்கும் மனநிலையில் இருப்பவர்களுக்கு உதவும்

# பிரளயநாதர்

மதுரை அருகே சோழவந்தான் பிரளயநாத சுவாமியை மனதார வழிபட்டு பிரார்த்தனைகள் செய்தால், செவ்வாய் தோஷம் முதலான தோஷங்கள்நீங்கும்.நம்பிரச்சினைகளையெல்லாம் தீர்த்துவைப்பார், வழக்கு முதலான சிக்கல்களில் நமக்கு வெற்றியைத் தந்தருள்வார் பிரளய நாதர் என்று போற்றுகின்றனர் ஆச்சார்யப் பெருமக்கள்.

மதுரையில் இருந்து சுமார் 28 கி.மீ. தொலைவில் உள்ளது சோழவந்தான். இந்தத் தலத்து நாயகியாக ஜனகை மாரியம்மன் அழகுற ஆட்சி செய்துகொண்டிருக்கிறாள். ஜனக மகாராஜா வழிபட்ட திருத்தலம் இது.

ஜனகை மாரியம்மன் கோயிலுக்குப் பின்னால் மற்றொரு ஆலயம் உள்ளது. சக்தியும் சாந்நித்தியமும் கொண்டு திகழும் சிவாலயம் இது. இந்தக் கோயிலில் குடிகொண்டிருக்கும் சிவனாரின் திருநாமம் பிரளயநாத சுவாமி.

மிகச்சிறிய ஆலயம்தான். ஆனால் சுமார் ஐநூறு ஆண்டுகள் பழைமை வாய்ந்த திருக்கோயில் எனும் பெருமை மிக்க திருக்கோயில். அம்பாளின் திருநாமம் பிரளயநாயகி. கோயிலின் ஸ்தல விருட்சம் வில்வ மரம். செவ்வாய் தோஷம் உள்ளவர்கள், வழிபடக் கூடிய திருத்தலம் என்று போற்றுகிறார்கள்.

இந்தத் தலத்தின் இன்னொரு சிறப்பு... சுவாமியும் அம்பாளும் தனித்தனி சந்நிதிகளில் கோயில் கொண்டிருக்கின்றனர். சுவாமியும் அம்பாளும் கிழக்கு நோக்கிய சந்நிதியில் அருள்பாலிக்கின்றனர்.

aanmeegamalar.com








அடுத்து என்ன செய்வதென்று வழி தெரியாமல் குழம்பித் தவிக்கும் மனநிலையில் இருப்பவர்கள், செவ்வாய் தோஷம் முதலான தோஷங்களில் உள்ளவர்கள் சோழவந்தான் பிரளயநாத சுவாமியை வஸ்திரம் சார்த்தி வேண்டிக்கொண்டால், அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பார் பிரளயநாத சுவாமி.

அதேபோல், இங்கே உள்ள விநாயகரும் விசேஷமானவர். விநாயகரின் திருநாமம் பால கணபதி. இவருக்கும் பிரளயநாதருக்கும்சர்க்கரைப் பொங்கல் நைவேத்தியம் செய்து வேண்டிக்கொண்டால், நினைத்த காரியம் நிறைவேறும் என்கிறார்கள் பக்தர்கள்.

ஆன்மிகமலர்



அதேபோல், பெருமாள் கோயிலில் உள்ள துர்கையைத்தான் விஷ்ணு துர்கை என்று சொல்லுவோம். ஆனால் இங்கே உள்ள சிவாலயத்தில் விஷ்ணு துர்கையை தரிசிக்கலாம். செவ்வாய்க் கிழமையிலும் ராகுகால வேளையிலும் எலுமிச்சை தீபமேற்றி வழிபட்டால்,தாலி பாக்கியம் நிலைக்கச் செய்வாள் துர்கை என்பது ஐதீகம்.



சோழவந்தான் பிரளயநாதர் கோயிலின் இன்னொரு சிறப்பம்சம்... விசாக நட்சத்திரக்கார்களுக்கான ஆலயம் என்கிறார்கள் ஆச்சார்யப் பெருமக்கள். மாதந்தோறும் விசாக நட்சத்திர நாளில் வந்து யார் வந்து வேண்டிக்கொண்டாலும் அவை நிறைவேறும். விசாக நட்சத்திரக்காரார்கள் இங்கு பிரளயநாதரை வேண்டிக் கொண்டால், வீட்டில் குடும்ப ஒற்றுமை மேலோங்கும். குடும்பத்தில் சுபிட்சம் நிலவும். இதுவரையிலான தடைப்பட்ட காரியங் கள் விரைவில் நடந்தேறும்.

– முதன்மை
செய்தியாளர்
அழகுராஜா 9994162182

# சிறுவனுக்கு வைத்தியம் பார்த்த பெரியவா

e-magazine
aanmeegamalar.com



அந்தப் பையனுக்கு மிஞ்சி மிஞ்சி போனால் பதினஞ்சு, பதினாறு வயஸ்தான் இருக்கும். பாவம், தாங்க முடியாத தலைவலியால் அவதிப் பட்டான்! டாக்டர்கள், வைத்யம் இதெல்லாம் ஒரு பக்கம் அதுபாட்டுக்கு போய்க் கொண்டிருந்தாலும், அவனுக்கு பேரிடியாக ஞாபகசக்தியும் குறைந்து கொண்டே வந்தது.

aanmeegamalar.com

சோதனை காலத்திலும் ஒரு நல்ல காலம், ஞாபகம் நன்றாக இருக்கும் போதே பெரியவாளிடம் வந்து கண்ணீர் விட்டான். "எனக்கு தலைவலி தாங்க முடியலே பெரியவா. அதோட மறதி ரொம்ப இருக்கு. பாடத்தை ஞாபகம் வெச்சுக்கவே முடியலேபெரியவாதான் காப்பாத்தணும்" அழுதான்.



"கொழந்தே! நா..வைத்யசாஸ்த்ரம் படிச்சதில்லேடா.. வேதாந்த சாஸ்த்ரந்தான் படிச்சிருக்கேன்.."

பையன் நகருவதாக இல்லை. பெரிய வாளிடம் prescription வாங்காமல் போவ தாக இல்லை. அதற்கு மேல் அவனை சோதிக்க பெரியவா விரும்பவில்லை.

எனவே அவனிடம், "சரி, நான் சொல்ற வைத்யம் ரொம்ப கடுமையா இருக்குமேப்பா! ஒன்னால follow பண்ண முடியாதேடா கொழந்தே!"

aanmeegamalar.com

"அப்டீல்லாம் இல்லே பெரியவா ஒங்க வார்த்தைப்படி கட்டாயம் நடக்கறேன்!" வழி கிடைக்கும் நம்பிக்கையால் பையன் முகம் ப்ரகாஸமானது.

"ரொம்ப சந்தோஷம். அந்தக் காலத்துல, முகத் தலளவைன்னு ஒரு கணக்கு உண்டு. அதுப்படி, நாலு பெரிய்ய படில அரிசி, கோதுமை மாதிரி எதாவது ஒரு தான்யத்தை அளந்து ஒரு பையில கட்டி.. சபரி மலைக்கு இருமுடி கட்டிண்டு போறவாளை பாத்திருக்கியோ? அதுமாதிரி, அந்த தான்யத்தை ஒன்னோட

aanmeegamalar.com

தலையில வெச்சுண்டு, தெனோமும் ஒரு மைல் தொலைவு நடக்கணும்! செய்வியா? முடியுமா?”

“கட்டாயம் நடக்கறேன்..”

“இரு இரு. இன்னும் நான் முழுக்க சொல்லி முடிக்கலே! ஒரு மைல் தொலைவு நடக்கறச்சே யார்கிட்டயும் ஒரு வார்த்தை கூட பேசப்டாது! சிவ நாமாவோ, ராம நாமாவோ சொல்லிண்டிருக்கணும்! அந்த தான்யத்தை அன்னன்னிக்கி ஏதாவது சிவன் கோவிலுக்கோ, பெருமாள் கோவிலுக்கோ,.. க்ராம தேவதை கோவிலுக்கோ எதுவானாலும் சரி, குடுத்துடணும்! இல்லாட்டா. யாராவது ஒரு ஏழைக்கு அதைக் குடுத்துடணும்! இதுமாதிரி பதினோரு நாள் பண்ணினியானா.. ஒன்னோட தலைவலி போய்டும்; ஞாபகசக்தியும் நன்னா வ்ருத்தியாகும்”

பையனுக்கு ஒரே சந்தோஷம்! “நிச்சியம்நீங்க சொன்னபடி பண்றேன் பெரியவா” விழுந்து நமஸ்காரம் பண்ணிவிட்டு போனான். பெரியவாளின் அநுக்ரஹம் வேலை செய்ய ஆரம்பித்ததால், அவர் சொன்ன எதையும் மறக்காமல் ஞாபகம் வைத்துக்கொண்டு பண்ணினான்.

ஒரே வாரத்தில் பெரியவாளை தர்சனம்பண்ண வந்தான்அழுது கொண்டு இல்லை! சிரித்த முகத்துடன் வந்தான்!

“பெரியவாஎன் தலைவலி போய்டுத்து! டாக்டர்லாம் ரொம்ப ஆச்சர்யப்பட்டா! “என்ன மருந்து சாப்ட்டே?”ன்னு கேட்டா. பெரியவா பண்ணச் சொன்னதை சொன்னேன். தலைல ஏதோ நரம்பு பிசகி இருந்திருக்கும், தான்யத்தோட வெயிட் ஏறினதும், அது செரியாகி இருக்கும்ன்னு சொன்னா! இன்னும் பாக்கி இருக்கறதையும் பண்ணிடறேன் பெரியவா”

அவன் சொன்னதை சிரித்துக் கொண்டே கேட்டுவிட்டு, ப்ரஸாதம் குடுத்தனுப்பினார்.

உண்மைதான்! பெரியவாளுடைய அநுக்ரஹ பாரம் தாங்காமல், பிசகின நரம்பு சரியாகிவிட்டது!

**அபார கருணா சிந்தும் ஞானதம்**
**சாந்த ரூபிணம் ஸ்ரீ சந்திரசேகர குரும்**
**ப்ரணமாமி முதான்வஹம்**





e-magazine
aanmeegamalar.com

கட்டாய சந்தா இல்லை!

சப்ஸ்கிரைப் இல்லை!!

மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

ஆன்மிகமலர்.காம் வழங்கும்
ஆன்மிகமலர் மெயில் புத்தகம்
ஒரே கிளிக் 200 இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்

# காசி இராமேஸ்வரம்

## யாத்திரை முழுமையடைய அவசியம் செய்ய வேண்டியவை

காசி யாத்திரை செல்ல விரும்புபவர்கள் முதலில் இராமேஸ்வரம் சென்று, அங்குள்ள அக்னி தீர்த்தமாகிய கடலில் நீராடி ஈர உடையுடன் கடலில் மூன்று தடவை மூழ்கி எழ வேண்டும் !

ஒவ்வொரு தடவை மூழ்கும் போதும் ஒவ்வொரு பிடி மணல் எடுக்க வேண்டும் !

முதல் தடவை மூழ்கி எடுக்கும் மணலை சேது மாதவ என்று கூறி லிங்கமாகப் பிடித்தும்..

இரண்டாவது தடவை மூழ்கி எடுக்கும்மணலை பிந்து மாதவ என்று கூறி லிங்கமாகப் பிடித்தும்...

மூன்றாவது தடவை மூழ்கி எடுக்கும் மணலை வேணு மாதவ என்று கூறி லிங்கமாகப் பிடித்தும்...

கடற்கரையில் ஓரமாக வைக்க வேண்டும் !

பின்னர் மூன்று லிங்கத்திற்கும் தனித்தனியாக விபூதி, சந்தனம், குங்குமம் இட்டு, வில்வ இலை போட்டு ஓம் நம சிவாய என்கிற பஞ்சாட்சர மந்திரம் கூறி வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு, நைவேத்தியம் வைத்து, பின் சூடன் ஏற்றி தீபாராதனை காட்டி கும்பிட வேண்டும் !

பின் சேது மாதவ லிங்கத்தை மட்டும் எடுத்து பத்திரமாக நாம் வைத்துக் கொள்ள வேண்டும் !

பிந்து மாதவ லிங்கம் மற்றும் வேணு மாதவ லிங்கம் இரண்டையும் கடலில் விட்டு விட வேண்டும் !

அதன் பின் இராமநாதர் கோயிலுக்குள் உள்ள 22 தீர்த்தங்களில்... நீராட வேண்டும் !

01. மகாலட்சுமி தீர்த்தம்: செல்வவளம்
02. சாவித்திரி தீர்த்தம்: பேச்சுத்திறன்
03. காயத்ரி தீர்த்தம்: உலகத்துக்கே நன்மை
04. சரஸ்வதி தீர்த்தம்: கல்வி அபிவிருத்தி
05. சங்கு தீர்த்தம்: வாழ்க்கை வசதி அதிகரிப்பு
06. சக்கர தீர்த்தம்: மனஉறுதி பெறுதல்
07. சேது மாதவ தீர்த்தம்: தடைபட்ட பணிகள் சுலபமாக முடிதல்
08. நள தீர்த்தம்
09. நீல தீர்த்தம்
10. கவய தீர்த்தம்
11. கவாட்ச தீர்த்தம்
12. கந்தமாதன தீர்த்தம்: எத்துறையிலும் வல்லுனர் ஆகுதல்
13. பிரம்மஹத்தி விமோசன தீர்த்தம்
14. கங்கா தீர்த்தம்

aanmeegamalar.com



15. யமுனை தீர்த்தம்
16. கயா தீர்த்தம்
17. சர்வ தீர்த்தம்: எப்பிறவியிலும் செய்த பாவங்கள் நீங்குதல்
18. சிவ தீர்த்தம்: சகல பீடைகளும் ஒழிதல்
19. சத்யாமிர்த தீர்த்தம்: ஆயுள் விருத்தி
20. சந்திர தீர்த்தம்: கலையார்வம் பெருகுதல்
21. சூரிய தீர்த்தம்: முதன்மை ஸ்தானம் அடைதல்
22. கோடி தீர்த்தம்: மறுபிறவி இல்லாத முக்தி நிலை அடைதல்

22 தீர்த்தங்களிலும் நீராடி விட்டு கோடி தீர்த்தத்தை மட்டும் ஒரு கேனில் வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும் !


அதன் பின் ஈர உடையை மாற்றிக் கொண்டு இராமநாதர் மற்றும் பர்வதவர்த்தினி அம்மனுக்கு மாலை சாற்றி அர்ச்சனை செய்ய வேண்டும் !

அதன் பின்னர் இறைவனை வழிபட்டு காசிக்கு கிளம்ப வேண்டும் !

உடனே காசிக்கு செல்ல இயலாதவர்கள் தம்முடன் வைத்திருக்கும் சேது மாதவலிங்கத்தையும், கோடி தீர்த்தத்தையும் பூஜை அறையில் வைத்து காசி செல்லும்வரை பூஜை செய்யவேண்டும் !

காசி செல்லும் போது மறக்காமல் சேது மாதவ லிங்கத்தையும், கோடி தீர்த்தத்தையும் எடுத்துச் செல்ல வேண்டும் ! aanmeegamalar.com

காசி செல்பவர்கள் முதலில் அலகாபாத் சென்று, அங்கு சேது மாதவ லிங்கத்தை திரிவேணி சங்கமத்தில் இட வேண்டும் !




பின்னர் அங்கிருந்து ஒரு கேனில் தீர்த்தம் எடுத்துக் கொள்ள வேண்டும் !

பின்னர் காசி சென்று அங்குள்ள விஸ்வநாதருக்கு, இராமேஸ்வரத்தில் இருந்து எடுத்துச் சென்ற, கோடி தீர்த்தத்தால் அபிஷேகம் செய்து




வணங்க வேண்டும் !

பின்னர் தங்களுக்கு மிகவும் பிடித்த ஏதாவது ஒரு உணவுப் பொருளை அங்கிருந்து விட்டு விட வேண்டும் !

பின்னர் கயா சென்று, அங்கு நமது இறந்த மூதாதையருக்கு பித்ருக்கடன் செய்தும், மோட்ச தீபம் ஏற்றியும் வழிபட வேண்டும் !

இதனால் இறந்த மூதாதையரின் பரிபூரண ஆசி நமக்கும் நமது சந்ததியினருக்கும் கிடைக்கும் ! aanmeegamalar.com

அதன் பின்னர் மீண்டும் இராமேஸ்வரம் வர வேண்டும் !

உடனே இராமேஸ்வரம் வர இயலாதவர்கள் 15 நாட்களுக்குள் இராமேஸ்வரம் செல்ல வேண்டும்!

அது வரை அலகாபாத்தில் எடுத்த தீர்த்தத்தை பூஜை அறையில் வைத்து வணங்க வேண்டும்!

இராமேஸ்வரம் செல்லும் போது அலகாபாத்தில் எடுத்த தீர்த்தத்தை இராமேஸ்வரம் இராமநாதருக்கு அபிஷேகம் செய்து வழிபட்டு காசி இராமேஸ்வர யாத்திரையை நிறைவு செய்ய வேண்டும் !

இப்படி செய்தால் தான் காசி இராமேஸ்வர யாத்திரையின் முழுபலனும் பரிபூரணமாகக் கிடைக்கும்!

# அகத்தியர் பிரதிஷ்டை செய்த 432-வது லிங்க திருமேனி

# காஞ்சி மகான் மகா பெரியவா வழிபாடு செய்த திருத்தலம்

தொண்டை நாட்டில் பஞ்சபூத ஸ்தலங்களில் மண்ணுலகமாக போற்றப்படும் காஞ்சிமாநகரத்தின் மேற்கில் துவக்கமாக விளங்கும் வேகவதி ஆற்றின் வடக்கரையில் உள்ள கிளை யாறு (கிளார்) என்ற கிராமத்தில் அகத்தியர் தடாகத்தின் தென்கரையில் பசுமையான நிலங்களுக்கு மத்தியில் அமையப்பெற்றது. அறம்வளர்நாயகி உடனுறை அருள்மிகு அகத்தீஸ்வரர் ஆலயம்

**சிறப்பு அம்சம்:** இராமேஸ்வரம், சுசீந்திரம் அடுத்து இங்குதான் மகா மூலிகை நந்தி இருப்பது மேலும் இத்தலத்தின் சிறப்பாகும். இத் தலத்தில் அகத்திய திருக்குளம் இருப்பது சிறப்பு மேலும் மூலவர் பின்புறத்தில் ஒரே கல்லினால் செய்யப்பட்ட பிரமாண்ட சோமாஷ் கந்தர் அமைய பெற்றுள்ளது. சப்தநாத கல்லினால் ஆன மகா குரு அகத்தியர் மற்றும் லோபமுத்திரை அம்பாள் அமர்ந்த கோலத்தில் அருள்பாலிப்பு செய்து வருகின்றார். இத்தலத்தைப்பற்றி காஞ் சிபுராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஸ்தல சிறப்பு:** 3000 ஆண்டுகள் முன்பு மகா குரு அகத்தியர் பிரதிஷ்டை செய்த 432வது லிங்க திருமேனி பதினாறு பட்டைகளுடைய சோடஷ மகாலிங்கம், காஞ்சி மகான் மகா பெரி யவா வழிபாடு செய்த திருத்தலம்.







aanmeegamalar.com

**இதர மூர்த்திகள்:** ஸ்ரீ தர்மகணபதி, ஸ்ரீ பாலமுருகர், ஸ்ரீ தட்சணாமூர்த்தி, ஸ்ரீ லிங்கோத் பவர், ஸ்ரீ பிரம்மா, ஸ்ரீ சண்டிகேஸ்வரர், ஸ்ரீ கால பைரவர், நவகிரகங்கள், நாகர்கள், மகா மூலிகை நந்தியம்பெருமான், ஸ்ரீ மகா குரு அகத்தியர் மற்றும் லோபமுத்திரை அம்பாள். aanmeegamalar.com

**தல விருட்சம்:** வெள்ளெருக்கம், வன்னி மரம்.

**விழாக்கள்:** ஆண்டுதோறும் வருடாபிஷேகம் மற்றும் திருக்கல்யாண வைபவம், மாதம் இரு முறை பிரதோஷம் வழிபாடு, ஆண்டுக்கு ஒரு முறை நான்கு கால பூஜையுடன் மகா சிவராத்திரி வழிபாடு, வருடத்திற்கு ஆறு முறை நடராஜர் அபிஷேகம், மாதந்தோறும் அகத்தியர் மற்றும் லோபமுத்திரை அம்பாள் அவர்களுக்கு ஆயில்ய பூஜை, மாதந்தோறும் பௌர்ணமி பூஜை, பிரதோஷ வழிபாடு, நவராத்திரி விழா, அன்னாபிஷேகம், மேலும் இதர மூர்த்திகளான காலபைரவருக்கு அஷ்டமியில் வழிபாடு, விநாயகருக்கு சங்கடஹர சதுர்த்தி பூஜை, சஷ்டியில் முருகப்பெருமானுக்கு சிறப்பு வழிபாடு, நால்வர் பெருமக்களுக்கு குருபூஜை வழிபாடு ஆகியவை இத்திருத்தலத்தில் நடைபெறும் விழாக்கள் ஆகும்.

**பிராத்தனை:** நீண்ட நாட்களாக குழந்தை பாக்கியம் இல்லாத தம்பதியர் இவ்வாலயத்தில் அமைந்துள்ள வெள்ளெருக்கஞ் செடியில் தொட்டில் கட்டி வழிபாடு செய்தால் குழந்தை பாக்கியம் கிடைக்கும், நீண்ட நாட்களாக திருமணம் ஆகாத ஆணோ, பெண்ணோ இவ்வாலத்தில் உள்ள வன்னிமரத்தில் திருமாங்கல்ய கயிறு கட்டி ஆலயத்தில் நெய்தீபம் ஏற்றி வழிபாடு செய்துவர திருமணம் நடைபெறும். மேலும் காது கேளாதவர்கள் இவ்வாலத்தில் வழிபாடு செய்தால் காதுகேளாத குறைநீங்கும், சந்திரன் பரிகார ஸ்தலமாகவும் விளங்குகிறது, கல்வியில் சிறந்து

**நேர்த்தி கடன்:** பௌர்ணமி நாளிலோ அல்லது தங்களுக்கு உகந்த நாட்களில் தேன் மற்றும் நெல்லிக்கனி சாறுக்கொண்டு அபிஷேகம் செய்து விளக்கேற்றி வழிபாடு செய்வது சிறந்தது.

**அமைவிடம்:** சென்னை பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் பாலுசெட்டிசத்திரம் பஸ் நிறுத்



e-magazine
aanmeegamalar.com








தத்திலிருந்து திருப்புட்குழி மற்றும் முசரவாக்கம் வழியாக கிளார் வந்தடையலாம். காஞ்சிபுரத்தி லிருந்து நேரடி பஸ் வசதி உள்ளது (காஞ்சி புரம் களத்தூர், இறங்குமிடம் கிளார் கிராமம்)(காஞ் சிபுரத்திலிருந்து சுமார் 16 கி.மீ மற்றும் பாலு செட்டிசத்திரத்திலிருந்து சுமார் 6 கி.மீ)

**நடைதிறந்திருக்கும் நேரம்:** தினமும் காலை 800 மணிமுதல் 1200 மணி வரை, மாலை 400 மணி முதல் இரவு 800 மணி வரை

**முகவரி:** அருள்தரும் அறம்வளர் நாயகி உடனுறை அருள்மிகு அகத்தீஸ்வரர் ஆலயம், நெ.2 கிளார் கிராமம், தாமல் அஞ்சல், காஞ்சிபுரம் வட்டம் – மாவட்டம் 631551. : 9840390711, 9677652396.

**கைங்கர்யம் செய்பவர்களுக்கு:**

ஆலயத்திற்கு ரிஷப வாகனம் மற்றும் ஊர் எல்லையில் சுற்றிலும் வயல்களில் மத்தியில் ஆலயம் அமைந்துள்ளது.

ஒற்றையடி பாதையில் மட்டுமே பயணம் செய்து வழிபாடு செய்யும் சூழ்நிலையில் இருளில் மீண்டும் வீடு திரும்பவும் வர மிகவும் சிரமப்பட்டு வருகிறோம் ஆதலால் சோலார் மின் விளக்குகள், ஆலயத்திற்கு சுற்றுச்சுவர் மற்றும் திருமுறைகள் தேவாரம் முற்றோதல் நிகழ்ச்சி அவ்வப்போது நடைபெறும் வெளியூரில் இருந்து வரும் பெண் சிவனடியார்கள் மிகவும் சிரமப்பட்டு நெடுந்தூரம் சென்று தான் இயற்கை உபாதைகளை கழிக்கும் சூழ்நிலை நிலவுவதால் கழிப்பறை அத்தியாவசிய தேவையாக இருக்கிறது....

aanmeegamalar.com



திருப்பணிகள் செய்ய தங் களது தெய்வீக கைங்கர்யம் அனுப்ப வேண்டுகிறோம் நன்றி திருச்சிற்றம் பலம் கோவில் வாட்சப் எண் ஜிபே எண்:9626396665

- சிவ மோகன்ராஜ் பாலசுந்தரம்
(அஞ்சல் துறை எழுத்தர் காஞ்சிபுரம்)
தொலைபேசி எண் 9677652396

ஆன்மிகமலர்.காம்
www.aanmeegamalar.com

# நிருபராக விருப்பமா?

ஆன்மிகம், கோவில் வரலாறு, மகான்கள், பக்தி அனுபவங்கள்,
சமய நிகழ்வுகள் மற்றும் ஆன்மிகக் கட்டுரைகள் எழுதும் திறன் உள்ளவரா?

**ஆன்மிகமலர்.காம்** இணையதளத்தின் வாயிலாக
வெளிவரும் “ஆன்மிகமலர் மெயில் புத்தகம்” வெளியீட்டிற்காக

**புதிய நிருபர்கள் மற்றும் படைப்பாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.**

## அனுப்ப வேண்டியவை:

- உங்கள் கட்டுரைகள் / படைப்புகள்
- ச மீபத்திய புகைப்படம்
- முகவரி சான்று நகல்
- தொடர்பு விவரங்கள்

## படைப்புகள் வரவேற்கப்படும் துறைகள்:

- ஆன்மிகக் கட்டுரைகள்
- கோவில் சிறப்புகள்
- மகான்களின் வாழ்க்கை வரலாறு
- பக்தி அனுபவங்கள்
- சமய நிகழ்வுகள்
- கவிதைகள் மற்றும் சிறுகதைகள்

## உங்கள் படைப்புகளை அனுப்புங்கள்!

ஆன்மிக சேவையில் இணைந்து,
உங்கள் எழுத்தாற்றலை உலகறியச் செய்யுங்கள்.

## ஆன்மிகமலர்.காம்

“ஆன்மிகத்தின் ஒளியை உலசெங்கும் பரப்புவோம்”

படைப்புகளை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல்: aanmeegamalar@gmail.com

இணையதளம்: www.aanmeegamalar.com

தொடர்புக்கு: +91 9444228203

ஆன்மிகம் எழுதுவது ஒரு சேவை — அந்த சேவையில் நீங்களும் பங்கேற்ககலாம்!

# விபூதியின் மகிமையும், விபூதி பூச வேண்டிய வழிமுறைகளும்

விபூதி, (திருநீறு குறித்து, "திருநாவுக்கரசர்" பாடல்.

"மந்திரமாவது நீறு
வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு
துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு
சமயத்தில் உள்ளது நீறு
செந்தூர் வாயுமை
பங்கன் திரு ஆல
வாயான் திருநீறே. "

(திருநீற்றுப் பதிகம் ... பாடல் வரிகள்)

சைவ சமய வழிபாட்டில், முக்கிய மாக இடம்பெறுவது திருநீறு.

சிவபெருமானின் அடை யாளம் திருநீறு. விபூதி, என்ற சமஸ்கிருத சொல்லுக்கு, "ஐஸ் வர்யம்" என்று பொருள். இது ஆன்மாவை சுத்தப்படுத்தி, பேரின்பத்தை தருகிறது. இந்த திரு நீறு, நம்முடைய பாவங் களை அழிக்கிறது, ஆபத்துக்களில் இருந்து காக்கிறது, நமக்கு முழு பாதுகாப்பாய் இருந்து காப்பாற்றுகிறது.

நாட்டுப் பசுவின், சாணம் கொண்டு திருநீறு தயாரிக்கப்படுகிறது.

உலறவைத்த பசுவின் சாணம்,.. உமி, வறட்டி, மற்றும் சில மூலிகைகளை "அக்னி"யில் இட்டு சுட்டெரித்து, பின்னர் அதனை குளிர வைத்து அதிலிருந்து கிடைக்கும் சாம்பலே, திருநீறு ஆகும். திருநீறு எடுக்கும் போது, வலது கையின் மூன்று விரல்களால் எடுத்து, அதாவது மோதிர விரல், நடுவிரல், மற்றும் ஆள் காட்டி விரலை பயன்படுத்த வேண்டும்.

திருநீறு நெற்றியில் பூசும் போது, நெற்றியின் இடது புறம் இருந்து வலது புறமாக பூசவேண்டும்.

பூசும் போது சிவபெருமானின், "பஞ்சாட்சர" மந்திரமான "ஓம் நமசிவாய" என்று சொல்லியவாரு பூசவேண்டும்.

திருநீற்றில், நான்கு வகைகள் உள்ளது.



1. கல்பம் இது சாணத்தை அக்னியில் எரித்து கிடைக்கும் சாம்பல் ஆகும்.
2. அணுகல்பம் காடுகளில் உள்ள பசுக்களின் சாணம் கொண்டு தயாராவது.
3. உபகல்பம் தொழுவங்களில் உள்ள பசுவின் சாணம் கொண்டு தயாராவது.
4. அகல்பம் வீதிகளில் இருக்கும் பசுவின் சாணம் கொண்டு தயாராவது.



பொதுவாக நாம் “உப கல்பம்“ திருநீறு பூசுகிறோம். நெற்றியில் திருநீறு பூசும் போது ஏன்? மூன்று கோடுகள் போடுகிறோம்:

மூன்று கோடுகளுக்கு அர்த்தம் உள்ளது.

## முதல் கோடு

இந்த முதல் கோட்டில், “அகாரம், கார்ஹபத்யம், ரிக்வேதம், பூலோகம், ரஜோகுணம், ஆத்மா, க்ரியா சக்தி, அதிகாலை மந்திரத்தின் தேவதை, மகாதேவன் ஆகியவை அடங்கி உள்ளது.

## இரண்டாவது கோடு

உகாரம், தஷிணாக்னி, ஆகாயம், யஜுர் வேதம், சத்வகுணம், பகல் நேர மந்திர தேவதை, இச்சாசக்தி, அந்தராத்மா, மகேஸ்வரன் ஆகியவை உள்ளது.


## மூன்றாவது கோடு:

மகாரம், ஆஹவனீயம், பரமாத்மா, தமோகுணம் சுவர்க்கம், ஸாமவேதம், ஞானசக்தி, மாலை நேர மந்திர தேவதை, சிவன் ஆகியவை உள்ளது

யாரெல்லாம் திருநீற்றை நெற்றியில் இட்டுக்கொள்கிறார்களோ, அவர் எவராயினும், “பரிசுத்தம் அடைகிறார்கள், அடுத்து எல்லா “தீர்தங்களிலும் ஸ்நானம் செய்தவர்கள் ஆகிறார்கள், அடுத்து அவர்கள் எல்லா வேதங்களையும் ஒதியவர்கள் ஆவார்கள், அடுத்து அவர்கள் எல்லா ருத்ர மந்திரங்களையும் ஜபித்தவர்கள் ஆவார்கள், அடுத்து அவர்கள் எல்லா போகங்களையும் அனுபவிப்பார்கள், அடுத்து, உயிர் உடலை விட்டபின் சிவஸாயூஜ்ய அடைவார்கள், முடிவாக அவர்களின் பிறவி முடிவுக்கு வந்து இனி பிறக்க மாட்டார்கள்.

**- K. R. G. SRIRAMAN,**
Bangalore 560 064
Mob : 99724 66443.

aanmeegamalar.com



# சனி இராகு சேர்க்கையின்
# தீமைகள் விலகிட

உங்கள் பிறந்த ஜாதகத்தில் இராசிக் கட்டத்தில் சனியுடன் இராகு சேர்ந்திருந்தால் அல்லது சனியானது திருவாதிரை/சுவாதி/சதயம் நட்சத்திரத்தில் நிற்கும் போது நீங்கள் பிறந்திருந்தால் தொழிலில் அடிக்கடி நிலையற்ற தன்மை இருக்கும். வேலைக்குச் சென்றால்,ஒரு இடத்திலும் நிரந்தரமாகப் பணிபுரிய இயலாது.

அதே போல,உங்களுடைய ஜாதகத்தில் இராகு கிரகம் பூசம்,அனுஷம்,உத்திரட்டாதி என்று மூன்று நட்சத்திரங்களில் ஒன்றில் இருக்கும் போது பிறந்திருந்தாலும் இதே நிலைதான்!

இராகு மகா திசையில் சனி புத்தியோ சனி மகா திசையில் இராகு புத்தியோ உங்க ளுடைய இப்பிறவி யில் வர வேண்டும் என்பதில்லை. இப்படிப்பட்ட கிரக அமைப்பு இருந்தாலே போதும்.

aanmeegamalar.com

இதைச் சரிசெய்ய பாம்பாட்டி சித்தர் நமக்கு ஒரு சுலபமான அபிஷேக முறையை போதித் திருக்கின்றார்;

தமிழ்நாட்டில் பல ஊர்களில் வைத்தியநாத சுவாமி திருக்கோவில் அமைந்திருக்கின்றது

இங்கே இருக்கும் கால பைரவருக்கு அபய ஸர்ப்ப பைரவர் என்று பெயர்!

அந்த பைரவருக்கு ஆயில்யம் நட்சத்திரம் வரும் நாளில் இராகு காலத்தில் அபிஷேகம் நமது செலவில் செய்ய வேண்டும.

இப்படி 8 ஆயில்யம் நட்சத்திர நாட்களில் அபிசேகமும், அர்ச்சனையும் செய்து விட்டால், சனி + இராகு சேர்க்கையால் விளைந்த தொழில்/வேலை நிலையற்ற தன்மை மாறிவிடும்; இந்தப் பரிகாரம் செய்தாலும், பரிகா ரம் நிறைவு செய்த நாள் முதல் 3 ஆண்டுகள் அசைவம், மது இரண்டையும் கண்டிப்பாக கைவிட்டிருக்க வேண்டும்.

அப்படிச் செய்தால் மட்டுமே தாங்கள் செய்த பரிகார பூஜை பலன்களை அள்ளித் தரும.

– எம் அசோக்ராஜா
அரவக்குறிச்சிப்பட்டி
செல்: 9750333265





# கூழ் வார்த்தல் உருவான காரணமும் நன்மையும்

கேட்டதை எல்லாம் கொடுக்கும் காமதேனு பசுவை ஜமத்கனி முனிவர் வளர்த்து வந்தார்.

அவரிடமிருந்து அதை அபகரிக்க கார்த்த வீர்யாஜுனர் மகன்கள் திட்டமிட்டு,

ஜமத்கனி முனிவரிடம் சென்று காமதேனு பசுவை தங்களிடம் கொடுக்கும்படி கேட்டனர். ஆனால் அவர் மறுத்து விட்டார். இதனால் ஜமத்கனி முனிவரை கொன்று விட்டு காமதேனு பசுவை கார்த்தவீர்யாஜுனர் மகன்கள் கடத்தி சென்றனர்.

ஜமத்கனி முனிவர் கொல்லப் பட்ட தகவல் அறிந்ததும் அவரது மனைவி ரேணுகாதேவி உடன்கட்டை ஏறினார்.

அம்பிகையின் மறு உருவமான ரேணுகா தேவி தீயின் நடுவில் குதித்ததை கண்ட வருண பகவான் மழை பொழிந்து ரேணுகாதேவியை காப்பாற்றினார். உடல் முழுவதும் தீக்காயங் களுடன் ரேணுகாதேவி உயிர் தப்பினார்.

உடலில் ஏற்பட்ட தீ கொப்புளங்களை மறைக்க உடல் முழுவதும் வேப்ப இலையை சுற்றிக் கொண்டார். இந்த நிலையில் ஒரு ஊருக்குள் சென்ற அவர் பசியை போக்க உணவு கேட்டார். அந்த கிராமத்து மக்கள் ரேணுகாதேவிக்கு பச்சரிசி, வெல்லம், காய்கறி, இளநீர் கொடுத் தனர். அதை வைத்து ரேணுகாதேவி கூழ் காய்ச்சி குடித்து பசி ஆறினார்.


இந்த வரலாற்று நிகழ்வை பிரதி பலிக்கும் வகையில்தான் தற்போது அம்மன் ஆலயங்களில் கூழ்வார்த்தல் நடத்தப்படுகிறது.

ஆடி காற்றில் தூசு பறக்கும் என்பதால் இருமல் போன்ற நோய்கள் ஏற்படும். இதை தவிர்க்கவே மாரியம்மன் கோயில்களில் கஞ்சி வைப்பார்கள். aanmeegamalar.com

அம்பிகைக்கு முருங்கை கீரை, தண்டு கீரை மிகவும் பிடிக்கும் என்பதால், அம்மன் படையலில் இந்த 2 கீரைகளும் தவறாமல் இடம் பெறும். ஆடி மாதம் அம்மனை அனைவரும் தரிசித்து நற்பலனை அடைவோம்.

– சௌமியா சுப்ரமணியன்
பழைய பல்லாவரம், சென்னை–600117




ஆன்மிகமலர்.காம்
இலவச
ஆன்மிக இ-புத்தகங்கள்!
ஆன்மிக விஷயங்களை, கோவில்கள்
வரலாற்றை, பாரம்பரிய வழிபாட்டு
முறைகளை, முன்னோர்களின் வழஙகள
மிக எளிமையாக புரிந்து கொள்ளும்,
இ-புத்தகம் வடிவில் மாதம் இரண்டு
இதழ்களை வெளியிட்டுவருகிறது.
இதுவரை வெளிவந்த
195 க்கும் மேற்பட்ட இதழ்களை
எந்தவித கட்டணமும் இன்றி
இலவசமாக படித்து மகிழ
195+
இதழ்கள்
இலவசம்
aanmeegamalar.com இணையதளத்தில்
இபுத்தகம் பகுயில் படித்து மகிழுங்கள்.

# திருப்பதி பெருமாளை வழிபட்ட பலன் தரும்
# அத்தாள நல்லூர் கஜேந்திர வரதப் பெருமாள்

நெல்லை மாவட்டம் வீரவநல்லூர் அருகே அத்தாள நல்லூர் என்ற ஊரில் அத்தாள நல் லூர் கஜேந்திர வரதப் பெருமாள் கோவில் அமைந் துள்ளது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கோவில் என இங்குள்ள கல்வெட்டுகள் கூறு கிறது இங்கு உள்ள பெருமாளுக்கு கஜேந்திர வரதப் பெருமாள் என்று பெயர்.

மகாவிஷ்ணு வரம் அளித்த வரலாற்று சிறப்புமிக்க கோவில். aanmeegamalar.com

இந்திரதுமன் என்ற மன்னன் அகஸ்தியர் சாபத்தால் யானை வடிவம் பெற்றான். அந்த யானை கஜேந்திரன் என்ற பெயரால் கோவில் களில் உலா வந்து கொண்டிருந்தது.

மேலும் எல்லா யானைகளுக்கும் தலைமைப் பொறுப்பையும் ஏற்று நடத்தி வந்தது.

ஒருமுறை கஜேந்திரன் என்ற யானை குற்றால நாதரை வழிபட்டு மகாவிஷ்ணுவை தரிசிக்க அத்தாள நல்லூர் வந்தது.

அங்குள்ள குளத்தில் நீராடி விட்டு ஒரு தாமரை மலரை பறித்து விஷ்ணுவை வழிபடச் செல்லும் நேரத்தில் நாதமுனிவரின் சாபத்தால் முதலை வடிவம் கொண்ட கந்தர்வன் அந்த குளத்தில் இருந்தபோது கஜேந்திரனுடைய யானையின் காலை கவ்வி பிடித்துக் கொண்டது யானை எவ்வளவோ முயன்றும் முதலையின் பிடியில் இருந்து விடுபட முடியவில்லை.

உடனே கஜேந்திரன் என்ற யானை தாமரை







யானையை
காப்பாற்றிய பெருமாள்
காட்சியளித்த குளம்.

மலருடன் கூடிய துதிக்கியை மேலே உயர்த்தி ஆதி மூலமே என்ற உரத்த குரலில் அழைத்தது.

இதைக் கேட்ட மகாவிஷ்ணு கருட வாகனத்தில் வந்து தன் கையில் உள்ள சக்கராயுததால் முதலையை கொன்று யானையை காப்பாற்றினார்.

அத்தி என்றால் யானை. அத்தியை ஆட்க்கொண்ட காரணத்தால் அத்தாள நல்லூர் என்ற பெயர் பெற்றது. இந்த ஊருக்கு கரி காத்த புரம் பூம்பு□ழில் என்ற பெயரும் உள்ளது.

பெருமாள் 24 திருவிளையாடல்கள் செய்த தலத்தில் இதுவும் ஒன்று.

இந்த இடம் கஜேந்திர மோட்ச பரிகாரத்தலம் என அழைக்கப் படுகிறது. கோவிலின் மேற்கே தாமிர பரணி நதி பாய்கிறது.



நின்ற கோலத்தில் பெருமாள்காட்சி யளிக்கிறார். இங்குள்ள பெருமாளை வழிபட்டால் திருப்பதி பெருமாளை வழிபட்ட பலன் கிடைக்கும். இங்குள்ள தூணில் நரசிம்மர் சிலை ஒன்று உள்ளது இந்த சிலைக்கு சந்தனம் அணிவித்து பன்னீர் அபிஷேகம் செய்தால் நாம் நினைத்தது நடக்கும்.

காலை ஐந்து மணி முதல் பத்து மணி வரையும் மாலை ஐந்து மணி முதல் 8 மணி வரையும் நடைதிறந்து இருக்கும். தினசரி நான்கு கால பூஜைகள் நடைபெறுகிறது.

புரட்டாசி கடைசி சனி கிருஷ்ண ஜெயந்தி வைகுண்ட ஏகாதசி தைப்பூசம் போன்றவை சிறப்பாக நடைபெறுகிறது. aanmeegamalar.com

முக்கூடல் மற்றும் வீரவநல்லூரில் இருந்து இந்த கோவிலுக்கு பேருந்து வசதிகள் உள்ளது. கோவில் குளத்தில் உள்ள பாறை யானை பாறை என்று அழைக்கப்படுகிறது.

இத்திருக்கோவில் பரிகாரத் தலமாகவும் விளங்குகிறது. இங்குள்ள சுற்று வட்டாரபகுதி மக்களுக்கு கஜேந்திர வரதன் ஆதிமூலம் என்ற பெயர்கள்உடையவர் கள் நிறைய இருப்பார்கள் சுற்றுவட்டார பகுதிகளுக்கு கண்கண்ட தெய்வமாக அத்தாள நல்லூர் கஜேந்திர வரதப்பெரு மாள் இருப்பதில் ஆச்சரியமில்லை.

– நடேஷ் கன்னா,
கல்லிடைக்குறிச்சி–627416
செல். 9944284135

eBook DOWNLOAD free

இதுவரை வெளிவந்த

# 200 க்கும் மேற்பட்ட இதழ்களை

aanmeegamalar.com

இணையதளத்தில்
இலவசமாக
படிக்கலாம்

Scan to Read
aanmeegamalar
e-book








# 1500 ஆண்டுகள் பழமையான காட்டூர் சுந்தரேஸ்வரர் கோயில்

திருவாரூர் மாவட்டத் தலைமையகத்திற்கு வடக்கே சுமார் 5 கி.மீ தொலைவில் திருவாரூர் கும்பகோணம் சாலையில் அமைந்துள்ள காட்டூர் சுந்தரேஸ்வரர் கோயில், 1500 ஆண்டுகள்பழமை யான சோழர் காலத்துத் தேவார வைப்புத்தலமாகும். இக்கோயில் தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. aanmeegamalar.com

கற்களால் கட்டப்பட்ட பெரிய கோயில், நெற்றியமைப்புடைய முன் மண்டபம் மற்றும் சதுரபீட ஆவுடையாரில் மூலவர் காட்சி தருகிறார்

இக்கோயிலின் மூலவர் சுந்தரேஸ்வரர் மற்றும் அம்பாள் அபிராமி ஆவார். இது வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழ் பக்திப் பாடல்களில் (தேவாரம்) போற்றப்பட்ட 'தேவார வைப்புத் தலங்களில்' ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

கருவறையில் வீற்றிருக்கும் அருள்மிகு சுந்த ரேஸ்வரர் (சுந்தரநாதர்), சதுர வடிவ ஆவுடையார் (பீடம்) மீது கம்பீரமாக லிங்க வடிவில் காட்சி தருகிறார். முற்காலச் சோழர் வழிபாட்டுத் தலங்களில் மட்டுமே பெரும்பாலும் சதுர வடிவ ஆவுடையாரைக் காண முடியும் என்பது குறிப் பிடத்தக்கது. aanmeegamalar.com

இறைவனுக்கு இடப்புறம் தனிச் சன்னதியில் அன்னை அபிராமி அம்மன் நின்ற கோலத்தில், நான்கு கரங்களுடன், பக்தர்களுக்கு அருள் பாலிக்கும் விதமாகத் தெற்கு நோக்கி எழுந்தருளி யுள்ளார்.

கருவறைச் சுற்றிலும் (தேவகோட்டம்) நர்த் தனவிநாயகர், தட்சிணாமூர்த்தி, மகாவிஷ்ணு, பிரம்மா மற்றும் துர்க்கை ஆகிய சோழர் காலத் துக்கே உரிய அழகான புடைப்புச் சிற்பங்கள் அமைந்துள்ளன.

பிரகாரத்தில் விநாயகர், சுப்பிரமணியர் (வள்ளி தெய்வானையுடன்), சண்டிகேஸ்வரர், நவகிர கங்கள் மற்றும் பைரவர் சன்னதிகள் உள்ளன.

சோழர் காலத்துக்கே உரிய கம்பீரமான அமைப்பில் சண்டிகேஸ்வரர் சன்னதி அமைந் துள்ளது.

இக்கோயிலின் தல விருட்சமாக வில்வ மரம் திகழ்கிறது. கோயிலின் முன்பாக அமைந்துள்ள குளம் (சிவதீர்த்தம்) புனித தீர்த்தமாகக் கருதப்

படுகிறது.

மாசி மாதத்தில் வரும் சிவராத்திரி இங்கு மிக விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. அன்று இறைவனுக்கு நான்கு கால பூஜைகளும், சிறப்பு அபிஷேகங்களும் நடைபெறும்.

ஒவ்வொரு வளர்பிறை மற்றும் தேய்பிறை பிரதோஷ நாட்களிலும் நந்தி பகவானுக்கும், சுந்தரேஸ்வரருக்கும் சிறப்பு வழிபாடுகள் நடத் தப்படுகின்றன. இதில் சுற்றுவட்டாரப் பகுதி மக் கள் பெருமளவில் கலந்துகொள்கிறார்கள்.

ஐப்பசி அன்னாபிஷேகம்: ஐப்பசி பௌர்ணமி யில் மூலவருக்கு நடைபெறும் அன்னாபிஷேகம் இத்தலத்தின் முக்கிய வழிபாடாகும்.

aanmeegamalar.com

திருவாரூர் தியாகராஜர் சுவாமி கோவிலுக்கு வரும் ஆன்மீகப் பயணிகள், அருகிலுள்ள இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க வைப்புத்தலத்திற்கும் தவறாமல் சென்று வழிபடுகின்றனர்.

எப்படி செல்வது: திருவாரூர் புதிய பேருந்து நிலையத்திலிருந்து 3 கி.மீ. திருவாரூர் ரயில் நிலையத்திலிருந்து 5 கி.மீ.



கோவில் நேரம்: காலை 8.00 – 12.30 மணி /மாலை 5.00 – 8.30 மணி வரை.

தொடர்புக்கு: அபிராமன் செல்: 9443524884

–டெல்லி தியாகராஜன்
போன்: 9868423215

# கருடன் பெண் வடிவில் கருடியாக காட்சி தரும் திருக்கோவில்




கருட வாகனத்தில் பெருமாளை தரிசிப் பவர்களுக்கு மறுபிறவியே இல்லை. பெருமா ளுக்கு வாகனமாகவும் அவரது கொடி யின் சின்னமாகவும் இருப்பவர் கருடாழ்வார்.

ஆண் வடிவில் மட்டுமே காணப்படும் கருடாழ்வார் ஒரு சில விஷ்ணு ஆலயங்களில் கருடி என்ற பெயரில் பெண் வடிவில் அருள் பாலிக்கிறார்.

புராணங்கள் நூல்களில் கருடனின் பெண் வடிவம் அல்லது கருடனின் துணைவி கருடீ அல்லது உன்னதி என்று அழைக்கப்படுகிறார். கருட பகவான் சாதாரணமாக இரு பெரிய இறக்கைகளுடன் மனிதனைப் போல வடிவம் கொண்டு வளைந்த மூக்குடன் அழகிய முகத் தோற்றத்தில் பெருமாள் எதிரே நின்ற நிலை யில்தான் கோவில்களில் காட்சி தருவார். வாகனமாக திருமாலை எழுந்தருளச் செய்து செல்லும்போது அமர்ந்த நிலையில் காட்சி தருவார்.

aanmeegamalar.com

திருவாரூரிலிருந்து சுமார் 30 கிமீ தொலைவில் உள்ள மன்னார்குடியில் அமைந் துள்ள இராஜகோபாலசுவாமி கோவி லில் செங்கமலத்தாயார் சன்னிதி அருகே பெருமாள் சன்னிதி எதிரே பெண் வடிவ கருடாழ்வார் காட்சி தருகிறார்.

இவர் காதணி மூக்கணி மற்றும் புடவை அணிந்த கோலத்தில் மங்களகரமாகக் காட்சி தருகிறார்.

ஆண் வடிவ கருடன் பெருமாளுக்கு வாக னமாக இருப்பது போல தாயாரின் வாகன சேவைக்கு அடையாளமாக இந்த பெண் வடிவ கருடீ வழிபடப்படுகிறார்.

e-magazine
aanmeegamalar.com

கட்டாய சந்தா இல்லை!

சப்ஸ்கிரைப் இல்லை!!

மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

ஆன்மிகமலர்.காம் வழங்கும்
ஆன்மிகமலர் மெயில் புத்தகம்

ஒரே கிளிக் 200 இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்

# மனம் கடவுளிடம் ஒட்டும்பொழுது மனிதனுக்கு அருள் கிடைக்கிறது

சீடன்: மனிதனின் சுத்தமான பக்கம் எது?

ஞானி: மனிதனின் உள் பக்கமான மனது. அது சுத்தமாக இருந்தால் ஞானம் பிறக்கிறது.

சீடன்: வெளி பக்கம் என்று உண்டா?

ஞானி: (சிரித்தபடி) பரபக்கம் என்று நமக்குத் தெரியாத உயர்ந்த விஷயங்களை உணர்த்துபவன் இறைவன்.

சீடன்: பாசங்களில் கட்டுண்டு கஷ்டப்படுவதை தவிர்ப்பது எப்படி?

ஞானி: உண்மையான பாசம் எது என்பது புரியும்போது.

சீடன்: இது எப்பொழுது சாத்தியம் சுவாமி?

ஞானி: குருவிடம் உபதேசங்களை பெற்று அதை உண்மையுடன் பின்பற்றினால் சாதுத்தன்மையுடைய "பசு" போன்ற உயிர் புண்ணியம் அடைந்து "பதி" என்ற சிவபெருமானிடம் தங்க இடம் கிடைக்கும். அப்பொழுது "பாசம்" என்பதின் உண்மைத் தன்மையை உணர்ந்து கடமையை மட்டும் செய்வான். அப்பொழுது அனைத்தும் விளங்கும்.

சீடன்: மஹான்களை சரியாக புரிந்து கொள்ள முடிவதில்லையே?

ஞானி: மனதை புரிந்து கொள்ளாதவர்களால் அது முடியாது.

சீடன் ஒழுக்கமாக இருக்க ஏன் மனிதன் கஷ்டப்படு கிறான்?

ஞானி: ஆராய்ச்சி செய்யாமலே அதை கடினம் என்கிறான் மனிதன்.

சீடன்: ஒழுக்கம் சர்ச்சைக்குரியதாகி விட்டதே?

ஞானி: கருத்து மாறுபாடு இருந்தால் தான் அபிப்ராயம் உண்டாகும். ஒழுக்கம் பற்றி இரண்டு அபிப்ராயங்கள் இருக்காது.

சீடன்: பின் ஏன் சராசரி மனிதன் பயப்படு கிறான்?

aanmeegamalar.com

ஞானி: ஒழுக்கமாய் இருந்தால் கலியுகத்தில் துன்பம் என எண்ணும் மனிதன் எப்பொழுது அது சுகம் என் காண்கிறானோ அப்பொழுது அதை விடமாட்டான். கடவுளை எண்ணி இதை ஆராய்ந்தால் சுகம்.

சீடன்: சட்டத்தால் ஒழுக்கம் வருமா?

ஞானி: எப்பொழுது அவை மனிதனின் பழக்கவழக்கங்களாக மாறுகிறதோ அப்பொழுது ஒழுக்கம் இயற்கையாகிவிடும்.

சீடன்: கடவுளை எதற்காக எண்ண வேண்டும்?

ஞானி: இறந்து போன பின் எங்கே போக வேண்டும் என்பதற்காக கடவுளை எண்ணுவதில்லை. உயிருடன் இருக்கும் பொழுது எப்படி வாழவேண்டும் என்பதற்காக உபயோகப்படுபவன் கடவுள்.



சீடன்: கடவுள் பக்தி எப்பொழுது துவங்கும்?

ஞானி: மனிதனின் இரண்டு கண்களுக்கு வெளி வேலை எப்பொழுது குறைகிறதோ அப்பொழுது கடவுள் பக்தி துவங்குகிறது..

சீடன்: அருள் எப்பொழுது

e-magazine
aanmeegamalar.com

கிடைக்கிறது?

ஞானி: மனம் கடவுளிடம் ஒட்டும்பொழுது.

சீடன்: உடல் சக்தி எப்பொழுது பெருகும்?

ஞானி: மனசக்தி குறையாமல் இருந்தால்.

சீடன்: அறியாமையை ஏன் கடவுள் படைத்தான்?

ஞானி: கடவுள் அதைப் படைக்கவில்லை. அவன் படைத்திருந்தால் அது மிக வலிமையுடையாதாக இருக்கும். அது மனித புத்தியின் சறுக்கல்.

சீடன்: செயலிலே சந்தோஷம் ஏற்படுவது எப்படி?

ஞானி: முடிவு எப்படி இருந்தாலும் பொருள் தெரிந்து செயல்படும்போது சந்தோஷம் ஏற்படுகிறது.

சீடன்: அருள் என்பது என்ன?

ஞானி: பிறருடைய தயவில்லாமல் ஆண்டவனின் தயவு நமக்கு வந்தால் அருள். தயவு நல்ல உள்ளத்துடன் இருந்தால் அனைவருக்கும் வரும் என்பவன் சிந்தனையாளன்.

சீடன்: தேவாலயங்களில் மெழுகுவர்த்திக்கு ஏன் அவ்வளவு முக்கியத்துவம்?

ஞானி: எரியாத மெழுகுவர்த்தியை பார்த்தவுடனேயே அது எரியும். வெளிச்சத்தைத் தரும். இருளை அகற்றும் என்ற ஞானத்தை மனிதன் தெரிந்து கொள்கிறான். அதனால் தொண்டே முதன்மையானது என்றார் ஏசுபிரான். மெழுகுவர்த்தி இன்று எரியாவிட்டாலும் என்றாவது எரியும் என்பதே கடவுளின் கருணை. தான் கரைந்தாலும் ஒளியைத் தருவதால் அதற்கு அவ்வளவு முக்கியம்.

சீடன்: மதங்களுக்குள் ஏன் சண்டை வருகிறது?

ஞானி: மதத்தை தவறாக புரிந்து கொண்டிருப்பதால் ஒற்றுமையை வளர்க்க வேண்டியுள்ளது. மதத்தின் லட்சியத்தை புரிந்து கொள்ளாத மனிதர்கள் அதை விவாதிப்பதால் சண்டை வருகிறது.

சீடன்: நம்பிக்கை மனிதனுக்குத் தேவையா?

ஞானி: தேவை. நம்பிக்கை இருந்தால்தான் குறைந்த பட்சம் மதவாதி. அதிகபட்சம் கடவுளைக் காணத் துடிக்கும் பக்தன்.

சீடன்: பக்தி என்றால் என்ன சுவாமி?

ஞானி: இறைவன் நினைவு வருவதற்காகச் செய்யப்படும் செயல்கள் பக்தி எனப்படும்.

ஞானச்சேரி ஞானிகள்

பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின் அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு எஸ்.மகாதேவன், போன் 098410 28028



ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல்

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.

ஆசிரியர் குழுவில் இணையலாம்

ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ளவும்
9444228203


ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
.காம்
இதுவரை வெளிவந்த
195க்கும் மேற்பட்ட இதழ்களை
எந்தவித கட்டணமும் இன்றி
இலவசமாக படித்து மகிழ!
ஆன்மிகமலர்
e-magazine
195+
aanmeegamalar.com இணையதளத்தில்
இபுத்தகம் பகுதியில்
படித்து மகிழுங்கள்!
www.aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

சார்பில்

# மதுரை மீனாட்சியம்மன் திருக்கோவில் குடமுழுக்கு சிறப்பிதழ்

## விரைவில்... உங்கள் கைகளில்



உங்கள் நிறுவன விளம்பரங்கள் குறைந்த செலவில் தரமாக வெளிவர எங்களை தொடர்பு கொள்ளவும்...

ஆன்மிக அன்பர்கள் இதழ் குறித்த தகவலை பெற தொடர்பு கொள்ளவும்

மேலும் தகவல்களுக்கு:

Ph:9994323622 W.No:9444228203